**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**
**C.C. No 13/2021 P.W .1**

| | | | |
|---|---|---|---|
| Name: ரவிக்குமார் | Father's Name | : | சுப்பையா |
| Village: | Taluk | : | |
| Age : | Occupation | : | |
| Caste : | Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2022

---

**<u>17.08.2022:</u> முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 16.06.2020 கரூர் வைசியா வங்கி புதுக்கோட்டை கிளை காசோலை எண்.000642 கொண்ட காசோலையின் அசல் ம.சா.ஆ.1 ஆகும். கடந்த 16.06.2020 கரூர் வைசியா வங்கி புதுக்கோட்டை கிளை காசோலை எண்.000643 கொண்ட காசோலையின் அசல் ம.சா.ஆ.2 ஆகும். 24.06.2020 தேதிய மேற்படி ம.சா.ஆ.1,2 காசோலைகள் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டதற்கான குறிப்புச்சீட்டின் அசல் ம.சா.ஆ.3 ஆகும். 18.07.2020 தேதிய மேற்படி ம.சா.ஆ.1,2 காசோலைகள் திருப்பப்பட்டது சம்பந்தமாக வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய அஞ்சலக ரசீதுடன் கூடிய அறிவிப்பின் அலுவலக நகல் ம.சா.ஆ.4 ஆகும். மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ-5 ஆகும் . மனுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

விரைவுநீதிபதி,காரைக்குடி.